**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT.**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 282/2008 |
| | | P/W's | : | 2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Murugesan | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி : **15-03-2019**

இந்த சாட்சிக்கு கேட்கும்திறன் இல்லாத காரணத்தினால் CRP.(MPD)(MD)No.622/2013, 19.06.2018-ம் தேதியிட்ட உத்தரவுப்படி பிரதிவாதி தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகள் இந்நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள கணினி திரையில் தனித்தனி வினாவாக தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சியால் அது வாசிக்கப்பட்டு அவரால் சொல்லப்பட்ட பதில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்கின் சூழ்நிலை மற்றும் தன்மையை கருத்தில் கொண்டு கேட்கப்பட்ட வினாக்கள், கொடுக்கப்பட்ட விடைகள் ஆகியவை வினா விடை வடிவிலேயே தட்டச்சு செய்யப்பட்டுள்ளன.

19. சர்வே எண்.334/8P கொண்ட நிலத்தினை முத்துசாமி கோனார் மகன் வெள்ளைச்செருவக்கோனார் கிரையம் எதுவும் வாங்கவில்லை என்றால், தவறு. முத்து சாமி கோனா மகன் வெள்ளை செருவக்கோனார் கிரையம் பெற்றுள்ளார்.

20. எந்த ஆவணத்தின் மூலம் மேற்படி நிலத்தை கிரையம் பெற்றார்?

கு. சடையாண்டி கோனார் என்பவரிடம் இருந்து மு.வெள்ளைசெருவக்கோனார் கிரையம் பெற்றார்.

21. அதற்கான பத்திரத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், அதற்கான பத்திரத்தை தாக்கல் செய்துள்ளோம்.

22. நான் தாக்கல் செய்துள்ள பத்திரங்களில் எந்த பத்திரத்தில் சர்வே எண்.334/8P கண்டுள்ளது என்றால், நான் தாக்கல் செய்துள்ள 1930ம் வருடத்திய பத்திரம் சொத்து விபரத்தில் சர்வே எண்.334E-ல், 45 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது. (மேற்படி ஆவணம் வா.சா.ஆ.1 ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது)

23. வா.சா.ஆ,1ல் கண்ட சர்வே எண்.334/E என்பது தான் சர்வே எண்.8P என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், நான் 1930ம் வருடம் சர்வே எண்.334/Eல் 45 செண்டை கிரையம் பெற்றுள்ளேன்.

24. சர்வே எண்.334/E என்பதும் சர்வே எண்.334/8P என்பதும் ஒரே நிலங்களா அல்லது வெவ்வேறு நிலமா என்றால் சர்வே எண்.334/E என்பதும் சர்வே எண்.334/8P என்பதும் வெவ்வேறு நிலங்களாகும்.

25. வா.சா.ஆ,11ல் காட்டப்பட்டுள்ள சர்வே எண்.334/8Pன் விஸ்தீரணம் என்ன? 334/8Pல் விஸ்தீரணம் 60 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது.

26. வா.சா.ஆ,11ல் காட்டப்பட்டுள்ள சர்வே எண்.334/9P சொத்தின் விஸ்தீரணம் என்ன? வா.சா.ஆ.11ல் சர்வே எண்.334/9P 60 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது.

27. வா.சா.ஆ.11ல் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.334/1P-ல் கட்டுப்பட்ட சொத்து எந்த பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால், 14.12.1931ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மேற்படி ஆவணம் வாதி தரப்பில் வா.சா.ஆ,2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)

28. வா.சா.ஆ,11ன்படி சர்வே எண்.334/1P ல் விஸ்தீரணம் 89 செண்ட் என காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

29. வா.சா.ஆ.2ன் படி சர்வே எண்.334/1P யை கிரையம் வாங்கினோம் என்று சொல்லும் பட்சத்தில் வா.சா.ஆ.2ல் 49 செண்டு தான் காண்பிக்கப்பட்டுள்ளது சர்வே எண்.334/1P-ல் 89 செண்டில் மீதமுள்ள 40 செண்ட் எந்த பத்திரத்தின் மூலம் கிரையம் பெறப்பட்டது என்றால், எனக்கு தெரியவில்லை.

30. வா.சா.ஆ,11ல் கண்ட வி.செருவக்கோனார் என்பது குப்பையக்கோனார் என்பவரின் பேரன் வி.செருவக்கோனார் ஆவார் என்றால் சரியா என்றால் இல்லை. குப்பையாக்கோனார் மகன் வெள்ளைச்செருவைகோனார் மகன் வி.செருவக்கோனார். எனது தந்தை வி.செருவக்கோனார் ஆவார்.

31. வா.சா.ஆ,11ல் குறிப்பிடப்பட்டுள்ள வி.செருவக்கோனார் என்பது எனது தந்தை வி.செருவக்கோனார் என்பவரை குறிக்காது என்றால்? சரியல்ல.

32. வா.சா.ஆ,11ல் குறிப்பிடப்பட்டுள்ள வி.செருவக்கோனார் என்பது குப்பையகோனார் மகன் வெள்ளைச்செருவக்கோனார் மகன் வி.செருவக்கோனார் என்றும், எனது தந்தை வி.செருவக்கோனார் இல்லை என்றும், பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி தாவா சொத்தில் எங்களுக்கு உரிமை இருப்பதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒம்.). D. ராம்கணேஷ், எம்.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி